81

# பெண் - தவிர்க்க முடியாதவள்

**முனைவர் ஜோ.ஜோனிகா ஹேம்லட்,**
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
பாரத் உயர் கல்விமற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

**முன்னுரை**

உயிர்களின் உன்னதப் படைப்பு மானுடம்.அதிலும் பெண்ணாய்ப் பிறப்பெடுப்பது சிறப்புக்குரியதாகும்.ஒரு நாட்டின் முன்னேற்றம், நாகரிக வளர்ச்சி அந்நாட்டின் பெண்மக்களின் நிலையைப் பொறுத்தே அமைகிறது.ஒரு நல்ல சமூகத்தை உருவாக்குவதே பெண்தான்! சமூகத்தில் ஒரு சகோதரியாக, மனைவியாக, தாயாக நின்று ஆடவரைப் பேணிக்காப்பதே பெண்தான்! இத்தகைய சிறப்புக் கருதியே இயற்கையின் அழகுகளை எல்லாம் பெண்ணாக உருவகித்தார்கள்.சுருங்கக் கூறின், பெண்ணின்றி இவ்வுலகு இல்லை. பெண்ணின் மேன்மையினையும், பெருமையினையும் விளக்கிக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்ணியம் வரையறை**

பெண்ணியம் என்ற சொல் மனித இனத்தின் சரிபாதியான பெண்களின் நிலையைப் பேசுவதாகும்."Feminism என்ற ஆங்கிலச்சொல் femina என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் திரிபு ஆகும். ஆங்கிலத்தில் உள்ள Feminism என்ற சொல்லே தமிழில் பெண்ணியம் என்று வழங்கப்படுகிறது".

**பெண்கள் நாட்டின் கண்கள்**

உயிர்களின் தோற்றத்திற்கும், முன்னேற்றத்திற்கும் காரணமாக இருப்பவள் பெண்.எனவே தான் பெண்ணைச் சக்தியின் வடிவம் என்கின்றனர். பெண்ணின்றி இவ்வுலகு இல்லை ஓர் ஆணின் முன்னேற்றத்திற்கு ஊன்று கோலாக இருப்பவள் பெண்ணே! எனவே தான் அறிவு, மேன்மை, இரக்கம் போன்ற நற்குணங்களைப் பெற்றவள் பெண் என உ.வே.சா குறிப்பிடுகின்றார்.

**அழியாக் காவியம் பெண்**

பெண்மை, தாய்மை என்ற இரு சொற்களும் பெண்ணைக் குறிக்கும் செறிவுடைய சொற்கள்.ஆண், பெண் இரு சாதியைத் தவிர, வேறு சாதி உலகில் இல்லை என்கிறார் ஔவையார்.எனவே தான் முன்னோர்கள் நிலத்தையும், நீரையும், கடலையும், நதிகளையும் பெண்ணாக உருவகித்து உள்ளனர்.பகுத்தறிவாளரான பாரதிதாசன் அவர்கள் பெண்களைத் தாயாக, உலகினை இயக்கும் சக்தியாக, அழியாக் காவியமாகத் தனது பாடல் வரிகளில் எடுத்தாள்வது பெண்ணின் பெருமைக்கு வலு சேர்க்கின்றது.

"உவகை உவகைஉலகத்தாயின் கூத்து-வந்து
குவியுதடா நெஞ்சில் உவகை உவகை!
எவையும் தன்னுள் ஆக்கிய பெருவெளி
உவகைஉவகை!
அவிழும்கூந்தல் வானக் கருமுகிலாய்-இடையினின்று



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

தவழப் புதுநகை மிக்குத் துலங்கும்
தாய் நின்றாடிய அடிஇடி முழங்கும்...."

உலகில் உயர்ந்தோரை, சான்றோரை, அறிஞர்களை.சாதனையாளர்களைப் பெற்றவள் பெண்.பெண்ணின் நிலை உயர்த்தப் பட்டாலொழிய உலகிற்கு உயர்வு இல்லை.ஓர் இறக்கையைக் கொண்ட பறவை என்றும் பறக்க முடியாது. எனவே தான் பாரதியார் பெண்ணின் சிறப்பை,

"வலிமை சேர்ப்பது தாய்முலைப்பாலடா
மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலி யழிப்பது பெண்க ளறமடா
கைகள் கோர்த்துக் களித்து நின்றாடுவோமடா"

என்று பெண்களை உயர்வு படுத்திப் பாடியுள்ளமைத் தெரிகிறது.

**வீரத்தின் மறு உரு பெண்**

பெண்கள் இல்லறப் பணியிலும், நாட்டுப்பணியிலும், கல்விப்பணியிலும், அமைதிப்பணியிலும் மட்டுமல்லாமல், போர்க்களம் சென்று பாசறைக் காவல் மேற்கொண்டனர். சிறிய வளையல்களை முன்கையில் அணிந்து தலை மயிர் பிடரி வரை தொங்க, இரவைப் பகலாகக் காட்டும் ஒளி மிகுந்த வாள் போன்ற கூர்மையான ஆயுதங்கள் இடையில் தொங்க,எண்ணெய் சிந்தும் குழாய் போன்ற நீண்ட வடிவம் கொண்ட தீப்பந்தங்களைக் கொளுத்திக் கையில் ஏந்திக் கொண்டு இறுக்கமான வெள்ளை உடை அணிந்து இரவு முழுவதும் காவல் தொழிலை மேற்கொண்ட வீரத்தின் பெருமையை முல்லைப்பாட்டு,

குறும்தொடி முன்கைக் கூந்தல்
"குறும்தொடி முன்கைக் கூந்தல் அம்சிறு புறத்து
இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவுவரிக் கச்சின் பூண்ட மங்கையர்
நெய்உமிழ் சுரையர், கெடும் திரி கொளி இக்
கையமை விளக்கம் நந்து தொறும் மாட்டத்"

எனஎடுத்துரைக்கிறது .ஓர் ஆண்மகன் வீரனாக வளர்வதற்கும் , உருவாவதற்கும் ஒரு பெண்ணே உந்து சக்தியாக இருக்கிறாள் .தாய்ப்பாலோடு வீரத்தையும் , ஊட்டி வளர்ப்பவள் தாய் , மகன் எங்கே எனக் கேட்டதற்கு ஒரு தாயானவள் அவன் எங்கே இருப்பான் என்பதை அறியேன் . ஆயினும் புலி இருந்து போன குகையாகிய என் வயிறு இங்கு உள்ளது அதனை வைத்து பார்க்கும் பொழுது அவன் போர்க்களத்தில் தான் இருப்பான் என வீர உணர்வோடு கூறுவதை

"புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே"

காவற்பெண்டின் பாடல் வரிகளில் காண முடிகிறது.

சங்ககால மறக்குடி மகளிர் தம்மைச் சார்ந்த ஆண்மக்கள் விழுப்புண் பட்டு இறப்பதை விரும்பினர். போரில் தன்னை எதிர்த்து வந்த யானையைக் கொன்று தானும் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டத் தாய் அவனைப் பெற்ற பொழுதை விட மிகவும் மகிழ்ச்சியடைந்தாள் என்பதை,

"மீன் உண் கொக்கின் தூவி அன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே"

என்ற பூங்கண் உத்திரையார் பாடலால் அறிய முடிகிறது.போரில் வீரமரணம் அடைந்த ஆடவரின் நடுகல்லை வழிபட்டால்நாட்டில் மழை பொழியும் நாடு செழிக்கும்,மக்கள் நோய் நொடி இல்லாமல் வாழ முடியும் என்று நம்பினர். இவ்வாறு நடுகல் வழிபாட்டின் போது கூடப் பெண்கள், தன் கணவனுக்குத் தினமும் போர் செய்யும் பகை வேந்தர் உருவாக வேண்டும், கணவன் போரில் வெற்றிகாண வேண்டும் என்று வேண்டினர். கணவன் போர்க்களத்தில் இறந்த நிலையிலும் போர்க்களம் சென்று அவன் உடலைச் சிதையிலிடும் காலம் வரை அங்குச் சென்ற நிலையை இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது.தன் மகனின் வீர மரணத்தைக் கேட்டுக் களம் சென்ற தாயின் வாடிய மார்புகள் பாலூறிச் சுரந்தன என்றும் புற பாடல் எடுத்துக் கூறுகிறது. சங்ககாலத்தில் மட்டுமின்றிப் பிற்காலத்திலும் புதுமைப்பெண் பாஞ்சாலி மன்னன் துரியோதனன் அவையில்

"பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் மாயமுணராத மன்னவனைச் சூதாட வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ நேர்மையோ? முற்படவே சூழ்ந்து முடித்ததொரு செய்கையன்றோ மண்டபம் நீர் கட்டியதும் மாநிலத்தைக் கொள்வதன்றோ பெண்டிர் தமையுடையீர் பெண்களுடன் பிறந்தீர்'என வீரமுழக்கம் செய்வதும்பெண்களின் வீர உணர்ச்சிக்குச் சவாலாகவே அமைந்துள்ளது இன்றும் பெண்கள் பல்வேறு துறைகளில், குறிப்பாக நாட்டையே ஆட்சி செய்வதிலும் வல்லவர்களாக விளங்கி வருகின்றனர் என்பதற்குப் பத்மாவதி, சத்தியவதி, சாந்தா, துர்க்காவதி, சரோஜினிநாயுடு, இந்திராகாந்தி அம்மையார். ஜான்சிராணி.செல்வி.ஜெயலலிதா போன்ற பெண்மணிகளைக் கூறமுடியும்.

**பெண்கல்வி**

கல்வியைக் கண்ணாகப் போற்றும் நம்நாடு, கல்விக்குக் கடவுளாகக் கலைமகளையே கொண்டு பெருமிதப்படும் நம்நாடு பெண்கல்விக்கு மட்டும் ஏற்றத்தாழ்வு காட்டுவது வேதனைக்குரியது. கல்வியும்.தொழிலும் மட்டுமே பெண்களுக்கு ஏற்றதுணை. எனவேதான் நம் முன்னோர்கள்,

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்றெல்லாம் கல்வியின் மேன்மையைக் கூறிப் போந்தனர்.கல்வியின் மூலம் ஒருவன் அறிவைப் பெறுவதோடு தன்னைச் சார்ந்தோர்க்கும் பயனுள்ளவனாகிறான்.கல்வியின் மேன்மையைப் பற்றி நம் முன்னோர்கள் அறிந்திருந்தாலும், பெண்களை அறிவில் வளர்க்கத் தயங்கினர்.பெண்ணினத்திற்குச் சுதந்திரம்.உரிமை கொடுக்கப் படவில்லை.பெண் கல்வி கற்றால் அவளது கல்வியறிவிற்கு ஏற்ற மாப்பிள்ளை பார்க்க வேண்டும்.என்றெல்லாம் அஞ்சினர்.பெண்கல்வி பெற்று அலுவல் சென்று பொருள்

சேர்த்தாலும், ஆணுடன் இணைந்து நான்கு சுவர்களுக்குள் குடும்பம் என்ற கோவிலை உருவாக்குவதே மேன்மையானது என்று எண்ணினர். எனவே தான் அடுப்பூதும்

பெண்களுக்கு படிப்பெதற்கு என்றனர் மூடர்கள். நகரங்களில் ஒரு சில குடும்பங்களில் ஆண்களைப் போன்று பெண்களும் உயர்கல்வி பெற்று அலுவல் (வேலை) பார்த்து வருவதைக் கண்டு பெண்ணினம் அனைத்துமே பெற வேண்டிய உரிமைகள், வாய்ப்புகளைப் பெற்றுவிட்டனர் என்று எண்ணுவது தவரானது. 1914-ல் பெண்கல்விக்கு வித்திட்டவர் பாரதியார்.ஒரு சமயத்தில் பெண்கள் மேடைகளில் பேசுவதற்குக் கூட தடைவிதிக் கப்பட்டிருந்தது.இதன் மூலம் பெண்கள் சமூகத்தில் சில வேளைகளில் மதிக்கப்படவில்லை என்பது தெரிகிறது. இதனை எதிர்த்து பெண்ணிற்கு சிறப்பிடம் கொடுத்துப் பெண் கல்வி குறித்துப்

“பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக் குள்ளே சில மூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்“ என்றும்
“பட்டங்கள்ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணொன்று கும்மியடி”பாரதி உற்சாகமாகப் பாடுகிறார்,

**இன்றைய நிலையில் பெண்கள்**

'சுதந்திர இயக்கத்தின் சூறாவளிக் காற்றுதான் நம் பெண்கள்' எனக் கூறி விடுதலை பெற்றோம்.அந்தச் சூறாவளி இன்று தன் சக்தியைப் பல்வேறு துறைகளிலும், பல்வேறு இடங்களிலும் காட்டத் தொடங்கி விட்டது.

பெண்ணாகப் பிறப்பதே பாவம் என்ற நிலை மாறி ஒரு குழந்தை கிடைத்து விடாதா?என்று ஒவ்வொரு பெற்றோரும் ஏங்கும் நிலை உருவாகி விட்டது.பெண் குழந்தை பிறந்தால் அவளைப் படிக்க வைப்பது கடினம்.அப்படியே கல்வி கற்கச் செய்தாலும் அவளுக்கேற்ற மாப்பிள்ளை பார்ப்பது கடினம் என்ற நிலை மலையேறி விட்டது என்றே கூறலாம்.தற்போது பெண்களின் ஆக்க சக்தி இன்று விண்ணையும், மண்ணையும், கடல் நீரையும், மேக மழையையும் அள்ளத் தயாராகி விட்டது.கல்வி கற்பதோடு நின்று விடாமல் பல்வேறு துறைகளிலும் தலை நிமிர்ந்து சங்கம் வைத்துச் சங்கமித்துக் கொண்டிருக்கிறார்கள். இயக்கம் வைத்து இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.எந்த சக்தியையும் எதிர்த்து போராடும் ஆற்றல் பெற்று விட்டார்கள்.எந்தத் துறையிலும் எவருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்து கொண்டிருக்கிறார்கள்.

**தொகுப்புரை**

சங்க காலத்தில் மிக உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்பட்டப் பெண்கள் இடைக்காலத்தில் அவர்களுடைய உயர்ந்த நிலை மாறி சமுதாயத்தினரால் ஒடுக்கப்பட்டு முகவரியே இல்லாத ஒரு நிலையில் இருந்ததைக் காணமுடியும், பக்தி இலக்கியக் காலத்தில் திருப்பாவை இயற்றிய ஆண்டாள் ஒருவரே

பெண்களில் உயர்வாகப் பேசப்பட்டார். ஆங்கிலேயர் காலத்தில் பெண்கள் இன்னும் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

தேசியக் கவிஞர் பாரதியார்பெண்விடுதலைக்கு முதன்முதலில் குரல் கொடுத்தார்.அவருக்குப் பின் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்த டாக்டர் அம்பேத்கர்.பெண்கள் நாட்டின் கண்கள் என்றுரைத்த தந்தை பெரியார் போன்றோர் பெண் விடுதலைக்குப் பெரிதும் பாடுபட்டனர். நல்லோர் பலரின் முயற்சியால் பெண்கள் இன்று சமுதாயத்தில் முன் அணியில் சிறந்து விளங்கி வருகின்றனர் என்பது கண்கூடு.

முதல் பெண் மருத்துவரான டாக்டர்.முத்துலட்சுமி, சமூக ஆர்வலரான திருமதிபண்டித ரமாபாய், சமூக சீர்திருத்தவாதியான மூவலூர் இராமமிர்தம், முதல் பெண் ஆசிரியரான திருமதி.சாவித்ரிபாய் பூலே. பெண்களுக்கு கல்வி வேண்டுமென பேராட்டக்களத்தில் இறங்கிய மலாலா, நாட்டின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டு இன்றும் மக்களால் பேசப்பட்டு வரும் அன்னை இந்திராகாந்தி, புரட்சித்தலைவி செல்வி.ஜெ.ஜெயலலிதா போன்றோர் இன்றைய பெண் ஆளுகைகளுக்குச் சான்றாக விளங்குபவர்கள் எனக் கூறின் மிகையாகா! உலகில் பெண் தவிர்க்க முடியாதவள் என்பதும் உறுதிப்பாடான ஒன்றே!

**துணை நூற் பட்டியல்**

1. திரு.வி.க, பெண்ணின் பெருமை,ப.25
2. முனைவர்அரங்க மல்லிகா,பெண்ணும் பெருமையும்,ப.16-17
3. பாரதியார்,பெண்மை,பா.3
4. ஔவையார், புறநானூறு,பா.86
5. தாயங்கண்ணியார்,புறநானூறு,பா.250



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599